மார்ச் 20, 2023

# உயிரிழந்த நீர்ப்பறவைக்கு எவியான் இன்ஃப்ளுயென்ஸா தொற்றியிருந்தது என சோதனையில் தெரியவந்தது

ப்ராம்ப்ட்டன், ON – புரொஃபெஸர்ஸ் லேக் மற்றும் டன்கன் வேல்லி ஃபாஸ்ட்டர் சௌத் ஆகிய இடங்களில் முன்னதாக உயிரிழந்த நீர்ப்பறவைகளுக்கு எவியான் இன்ஃப்ளுயென்ஸா (பறவைக் காய்ச்சல்) தொற்றியிருந்தது சோதனையில் தெரிய வந்தது.

மாதிரிகள் , கனடிய வனவிலங்கு சுகாதார கூட்டுறவு [Canadian Wildlife Health Cooperative (CWHC)] அமைப்புக்கு அனுப்பப்பட்டு, அங்கு அந்தப்பறவை இறந்தமைக்கான காரணம் எவியான் இன்ஃப்ளுயென்ஸா (பறவைக் காய்ச்சல்) என்பது உறுதி செய்யப்பட்டது.

விலங்குகளுக்கான ப்ராம்ப்ட்டன் நகர சேவைக் குழுவானது, நிலைமையை தீவிரமாக கண்காணித்து வருவதுடன் அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடன் இதற்கான பணியாற்றி வருகிறது

எவியான் இன்ஃப்ளுயென்ஸா (பறவை காய்ச்சல்) தொற்று மனிதர்களுக்கு பரவும் ஆபத்து மிகவும் அரிதானதே. இந்த நேரத்தில் பொது மக்களுக்க்கான ஆபத்து அதிகரிப்பதற்கான சுட்டிக்காட்டிகள் எதுவும் இல்லை.

செல்லப்பிராணிகளை வளர்ப்போர் பின்வரும் முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளக் கேட்டுக்கொள்ள்ப்படுகிறார்கள்:

- விலங்குகளை நீர்ப்பறவைகள் அல்லது அவற்றின் மலப் பொருட்களிலிருந்து தூரமாக வைக்கவும்
- நீர்ப்பறவைகளுக்கு உணவளிக்கவோ அல்லது அவற்றுடன் பரஸ்பர செயல்புரியவோ கூடாது
- பூனைகளை வீட்டுக்குள்ளாகவே வையுங்கள்
- நாய்களை கழுத்துப்பட்டைக கொண்டு கட்டி வையுங்கள் (நகராட்சி சட்டத்தின் கீழ் அவசியம்)

- செல்லப்பிராணிகளுக்கு (எ.கா., நாய்கள் அல்லது பூனைகள்) விளையாட்டுப் பறவைகள் அல்லது கோழிகளின் பச்சை இறைச்சியை உணவாக அளிக்க வேண்டாம்
- செல்லப் பறவைகள், சாதாரணமாக வீட்டுக்குள் வைத்து வளர்க்கப்படாவிட்டால், அவற்றை வீட்டுக்குள்ளேயே கட்டுப்படுத்தப்பட வேண்டும்
- பாக்டீரியா அல்லது வைரஸ் காரணமாக மாசுபடுவதன் வாய்ப்பைக் குறைக்க, பறவை தீவன கொள்கலன்களை அடிக்கடி அகற்ற வேண்டும் அல்லது சோப்பு மற்றும் தண்ணீரில் கழுவ வேண்டும்.

இந்த நேரத்தில், இறந்த நீர்ப்பறவைகள் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து பொது இடங்களும் பொதுமக்கள் வருகை தர திறந்தபடியே இருக்கும். அப்பகுதியில் உள்ள நீர்ப்பறவைகளுக்கு பறவைக் காய்ச்சல் (பறவைக் காய்ச்சல்) தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது என்பதை பொதுமக்களுக்கு உணர்த்தும் வகையில் அறிவிப்பு பலகைகள் வைக்கப்படும்.

இறந்த நீர்ப்பறவைகளை பொதுமக்கள் காண நேர்ந்தால், 3-1-1 என்ற எண்ணிற்கு அழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கனடிய வாத்துக்கள் பற்றிய கூடுதல் தகவல்களை ப்ராம்ப்ட்டன் நகரின் இணையதளத்தில் இங்கே காணலாம்

எவியான் இன்ஃப்ளுயென்ஸா (பறவைக் காய்ச்சல்) பற்றிய கூடுதல் தகவல்களை கனடா அரசின் இணையதளத்தில் இங்கே காணலாம்.

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca